இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்

# இயேசுவை தினம் பார்க்கிறேன்

VOL 25 ISSUE 07 JULY 2025

ஆண்டு சந்தா 100/- தனிப்பிரதி 10/-




இயேசுவை தினம் பார்க்கிறேன் மாதப் பத்திரிக்கை இப்பொழுது Digital முறையில் நம்முடைய இணையதளத்திலும்

WWW.JESUSLIVES.IN

# ஆசிரியர் மடல்

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய
இயேசு கிறிஸ்துவின்
இனிய நாமத்தில் உங்கள் யாவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்.
நீர் எனக்கு பாராட்டின உமது கிருபை பெரியது என்று சங் 86:13-ல் தாவீது ராஜா
சொல்லுகிறதை பார்க்கிறோம், ஆம் தேவன் பாராட்டின கிருபை பெரியது.
கடந்த ஜூன் மாதத்தில் நடந்த முழு இரவு ஜெபத்தில்
தேவன் திரள் ஜனங்களை கூட்டிச்சேர்த்து ஜெபிக்கவும் மன்றாடவும் வைத்தார்.
அதே போல் ஜூன் 13 ,14 தேதிகளிலும், மதுரையில் ஜூன் 21-ம்
தேதி நடைபெற்ற உபவாச ஜெபத்திலும் தேவன் வல்லமையாய் செயல்பட்டார்.
பலத்த காரியங்களை செய்தார். தொடர்ந்து ஜூலை மாதத்தில் சென்னையிலும், இராமநாதபுரத்திலும்
கூட்டங்கள் உண்டு. அதற்காக ஜெபித்துக்கொள்ளுங்கள். உலகத்தை யுத்த மேகங்கள்
மூடிக்கொண்டிருக்கிறது. இஸ்ரேல் ஈரான் யுத்தம், ரஷ்யா உக்ரேன் யுத்தம், இப்படி பூமி முழுவதும்
பரவிக்கொண்டிருக்கிறது. இவைகள் நடப்பதைப் பார்க்கும் பொழுது கர்த்தருடைய வருகைக்குச்
சொன்ன ஒவ்வொரு காரியமும் நிறைவேறிக் கொண்டிருக்கிறது.
உலகத்தின் முடிவு நெருங்கி கொண்டிருக்கிறது. ஜனங்கள் இதை
உணராமல் மனம் போன போக்கில் போய் கொண்டிருக்கிறார்கள்.
இயேசுகிறிஸ்துவின் வருகைக்கு நாமும் நம்மை
சார்ந்தவர்களும் ஆயத்தமாக வேண்டும். அதை
சார்ந்து நம்முடைய ஊழியங்களும், சபைகளும்
செயல்பட வேண்டும். தேவனுடைய வருகையை
எதிர்கொள்ள நாம் ஜெபிக்க வேண்டும், அதற்காக
செயல்பட வேண்டும். தொடர்ந்து நாம் செய்து
வருகின்ற எல்லா ஊழியங்களுக்காக ஜெபித்துக்
கொள்ளுங்கள். உங்கள் உதாரத்துவமான
காணிக்கையினால், ஜெபத்தினால் இந்த ஊழியத்தை
தாங்குங்கள். உங்களுக்காக நாங்களும் ஜெபிக்கிறோம்.
இயேசு கிறிஸ்துவின் மாறாத கிருபை
நம் அனைவரோடும் இருப்பதாக ஆமென்.



இயேசுவின் பணியில்
L. Vincentraj
(சகோ .L.வின்சென்ட்ராஜ்)

சகோதரர்
L.வின்சென்ட்ராஜ்

# உன்னை விழுங்கினவர்கள் தூரமாவார்கள்



ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் யாவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள். இந்த தேவ செய்தியின் மூலமாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

அப்பொழுது உன் வனாந்தரங்களும், உன் பாழிடங்களும், நிர்மூலமான உன் தேசமும், இனிக் குடிகளின் திரளினாலே உனக்கு நெருக்கமாயிருக்கும். உன்னை விழுங்கினவர்கள் தூரமாவார்கள். ஏசாயா 49:19

ஒருவரும் இல்லாத மனிதராக காட்டுக்குள் குடியிருப்பது போல் வாழ்கின்ற வாழ்க்கைக்கு பெயர் தான் வனாந்தரத்தில் வாழும் வாழ்க்கையாகும். உங்களை விழுங்கியவர்களை தேவன் தூரமாக்குவார். விழுங்குதல் என்றால் என்ன? மருத்துவமனைக்கு சென்றால் மருத்துவர்கள் நமக்கு மாத்திரைகள் கொடுப்பார்கள். அந்த மாத்திரையை நாம் ரசித்து ருசித்து சாப்பிடுவதில்லை. கண்ணை மூடிக்கிட்டு அப்படியே விழுங்கி விடுவோம். அந்தக் காலத்தில் சிறுபிள்ளைகளுக்கு வயிற்றுவலி வந்தால் பூச்சிக்கடி என்று சொல்லி வாயை திறக்கச் சொல்லி வேப்பெண்ணெய் ஊற்றி விடுவார்கள். சிறுபிள்ளைகள் அப்படியே விழுங்கிய விட வேண்டும். அந்தக் காலத்தில் எந்த ஒரு விஞ்ஞானமும் இல்லை, எந்த ஒரு மெடிசனும் இல்லை. வேப்பெண்ணை நன்றாக வேலை செய்தது. உங்களை விழுங்கினவர்கள் தொண்டைக்குழியில் அப்படியே வைத்திருக்கிறார்கள். அவர்கள் உங்களை விட்டு தூரமாய் போவார்கள்.

நீங்கள் சாத்தானை நன்றாக அறிந்திருந்தால் தான் அவனை முற்றிலும் முறியடிக்க முடியும். அவனைப் பற்றி தெரிந்திருந்தால் தான் நீங்கள் அவனை ஈஸியாக மேற்கொள்ள முடியும். அவன் எப்படிப்பட்டவன் என்றால் பற்கள் இல்லாத, வயதான கிழவன். அவன் ஒரு காலத்தில் பரலோகத்தில் தேவனை துதித்துக் கொண்டிருந்தவன். என்றைக்கு அவன் கீழே விழுந்தானோ, அன்றைக்கே அவனுடைய பற்கள் உடைந்து போய் விட்டது. அவனால் மெல்ல முடியாது, அப்படியே விழுங்கிவிடத்தான் வேண்டும். இன்றைக்கு சிலரை அவன் விழுங்கி வைத்திருக்கிறான். அவனுடைய வேலை என்னவென்றால் யார் யார் இன்றைக்கு தேவனைத் தேடுகிறார்களோ, பரிசுத்தமான வாழ்க்கை வாழ்கிறார்களோ தேவன் மேல் பக்தியாய் இருக்கிறார்களோ, யார் நீதியாய், உண்மையாய் நடக்கிறார்களோ அவர்கள் எந்த மதமாக இருந்தாலும் அதை அவனால் தாங்க முடியாமல் அவர்களை அப்படியே அழிக்க வகைதேடி அலைவான்.

சாத்தான் கீழே விழுந்ததினால் கர்த்தரை தேடுகிறவர்களை எப்படி விழுங்கலாம் என்று வகைதேடிச் சுற்றித்திரிந்து கொண்டிருக்கிறான். தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள், ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான். 1 பேதுரு 5:8-ல்

சொல்லப்பட்டுள்ளபடி நீங்கள் எதைச் செய்தாலும் தெளிவாக. சரியாக செய்ய வேண்டும். தெளித்த புத்தியுள்ளவர்களாக இருக்க வேண்டும். எந்த ஒரு காரியத்திலும். தெளிவான ஒரு முடிவை எடுக்க வேண்டும். சாத்தான் தெளிவில்லா தவர்களை எளிதாக அடித்து விடுவான். நீங்கள் எல்லாவற்றிலும் விழிப்புணர்வோடு தெளிந்த புத்தியுள்ளவர்களாய் இருக்க வேண்டும். நீங்கள் படுத்திருந்தாலும் உங்களுடைய ஆத்துமாவை விழிப்பாய் வைத்திருக்க வேண்டும். தேவனுடைய சத்தத்தைக் கவனமாய் கேட்க வேண்டும்.

புத்தியுள்ள கன்னிகைகளுக்கும் புத்தியில்லாத கன்னிகைகளுக்கும் வித்தியாசம் இருந்தது. புத்தியுள்ள கன்னிகைகளுக்கு பெயர். மணவாட்டிகள். புத்தியில்லாத கன்னிகைகளுக்கு பெயர் மறுமனையாட்டிகள். நீங்கள் புத்தியுள்ளவர்களாக இருந்தால் மணவாட்டியாக இருப்பீர்கள். இருமனம் உள்ளவன் தன் வழிகளில் எல்லாம் நிலையற்றவனாய் இருக்கிறான். சாத்தான் அப்படித்தான் ஒவ்வொருவரையும் நிலையற்றவர்களாய் மாற்றி விடுகிறான். எல்லாரும் இயேசுவை நேசிக்கலாம். எல்லாரும் இயேசுவை பின்பற்றலாம் ஆனால் நீங்கள் மணவாட்டிகளா அல்லது மறுமனையாட்டிகளா என்பது இயேசுவுக்கு மட்டும் தான் தெரியும். உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கத்தைப்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடி சுற்றித் திரிகிறான். பிசாசின் வேலையே கெர்ச்சிக்கிறது தான். உன் மகள் படிக்க மாட்டாது. உன் வீட்டுக்காரருக்கு ஒரு வேலையும் தெரியாது என்று சொல்லி உங்களை பயமுறுத்திக் கொண்டிருப்பது தான். நீங்கள் தெளித்த புத்தியுள்ளவர்களாக இருக்க வேண்டும். விழித்திருங்கள். மணவாட்டியாய் இருங்கள் மறுமனையாட்டியாக அல்ல.

இன்றைக்கு உங்களுக்கு வரவேண்டிய ஆசீர்வாதங்களை சாத்தான் விழுங்கி வைத் திருக்கிறான். உங்களுக்கென்று தேவன் ஆயத்தம் பண்ணி வைத்திருக்கும் ஆசீர்வாதங்களை நீங்கள் காணாதபடி சாத்தான் மறைத்து வைத்திருக்கிறான், தேவன் உங்களுக்கு வைத்திருக்கிற நன்மையை. தேவ திட்டத்தை முடக்குகிறதற்கு சாத்தான் அதை விழுங்கி வைத்திருக்கிறான். அது இன்னும் உள்ளே இறக்கவில்லை. தொண்டையில் தான் இருக்கிறது. ஏற்ற வேளையில் வெளியில் வரும்படி தேவன் செய்வார். யோசேப்பு எகிப்திலிருந்த காலத்தில் பார்வோனுக்கு ஒரு சொப்பனம் வந்தது.

**அப்பொழுது அழகும் புஷ்டியுமான ஏழு பசுக்கள் நதியிலிருந்து ஏறிவந்து புல் மேய்ந்தது. அவைகளின்பின் அவலட்சணமும் கேவலமுமான வேறே ஏழு பசுக்கள் நதியிலிருந்து ஏறிவந்து. நதி ஓரத்தில் மற்றப் பசுக்களண்டையிலே நின்றது. அவலட்சணமும் கேவலமுமான பசுக்கள் அழகும் புஷ்டியுமான ஏழு பசுக்களையும் பட்சித்துப்போட்டது. இப்படிப் பார்வோன் கண்டு விழித்துக்கொண்டான். ஆதி 41:2-4.** தேசத்தில் நடக்கப்போகிறதான ஆபத்தை குறித்து கர்த்தர் பார்வோனோடு பேசினார். தேவனை நம்பாத மனிதனுக்கே தேவன் ஆசீர்வாதம் தருவார் என்றால் கர்த்தரே வழி என்று அவரையே நம்பி நிற்கிற உங்களுக்கு ஒரு அற்புதம் கட்டாயம் நடக்கும். இன்றைக்கே அந்த அற்புதம் உங்கள் வாழ்க்கையில் நடக்கும்.



வரி வசூலிக்கிறவன் வந்து பேதுருவிடம் உங்கள் போதகர் வரி பணம் செலுத்துகிறது இல்லையா? என்று கேட்டான். உங்களுக்கு வர வேண்டிய ஆசீர்வாதங்களை அபகரிக்க இந்த உலகத்தில் நிறைய பேர் இருக்கிறார்கள். இயேசு பேதுருவிடம் நீ கடலுக்கு போய் தூண்டில் போட்டு முதலில் அகப்படும் மீனைப் பிடித்து அதன் வாயைத் திறந்து பார், அதில் ஒரு வெள்ளிப்பணத்தை காண்பாய், அதை எடுத்து உனக்காகவும், எனக்காகவும் வரியை செலுத்து என்று சொன்னார். யார் யார் உங்களை விழுங்கினார்களோ அவர்கள் எல்லோரும் உங்கள் வீட்டை விட்டு புறப்பட்டு போவார்கள். உங்கள் வருமானத்தை. தொழிலை. ஆசீர்வாதத்தை திருடினவன் உங்களை விட்டு ஓடிப்போகப் போகிறான். உத்தமனுக்கு கர்த்தர் துணை. சாத்தான் எதை விழுங்கினான் என்று இப்பொழுது பார்ப்போம்.

## பரிசுத்தமானது விழுங்கப்பட்டது

பரிசுத்தமானதை விழுங்குகிறதும், பொருத்தனை செய்தபின்பு யோசிக்கிறதும், மனுஷனுக்குக் கண்ணியாயிருக்கும். நீதி 20:25. ஜெபம்பண்ணு என்று சொன்னால் நான் அப்புறம்மேல் பண்ணிக் கொள்கிறேன் என்று சொல்லி பரிசுத்தமானவைகளை விழுங்கக்கூடாது. பன்றிகள் முன்பாக முத்துக்களைப் போடக்கூடாது, போட்டால் அது பீறிப்போட்டு விடும். சாத்தான் விழுங்கிய அத்தனை நன்மைகளையும் ஆண்டவர் திரும்ப கக்கப்பண்ணப் போகிறார். கர்த்தர் மீனுக்குக் கட்டளையிட்டார், அது யோனாவைக் கரையிலே கக்கிவிட்டது. யோனா 2:10 யோனா தேவசித்தத்திற்கு மாறாக ஆண்டவர் போகச் சொன்ன இடத்திற்குப் போகாமல் தர்ஷீசுக்கு கப்பல் ஏறி போன போது கடலில் கொந்தளிப்பு உண்டானது. அது அடங்கும்படியாக அவர்கள் யோனாவை எடுத்து கடலில் போட்டார்கள். இந்த பாதகத்தை எங்கள் மீது சுமத்தாதிரும் என்று சொல்லி ஆண்டவரிடம் கெஞ்சினார்கள். கர்த்தர் அங்கே ஒரு மீனை ஆயத்தப்படுத்தி இருந்ததால் அது அவனை மூன்று நாள் தன் வயிற்றிலே வைத்திருந்தது. அதனால் அந்த மீன் உமிழ் நீர் கூட விழுங்க முடியவில்லை. அந்த மீன் எவ்வளவு கவனமாக கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து நடந்தது.

யோனா மூன்று நாள் மீனின் வயிற்றில் இருந்தார். அங்கிருந்து ஆண்டவரே கடல்பாசி என்னை சூழ்ந்து கொண்டது என்றும், மரணத்தின் விளிம்பில் இருக்கிறேன் என்றும் சொல்லி ஜெபிக்கிறார். நீங்கள் நன்றாக இருக்கும் காலத்தில் ஜெபிக்காமல் இருந்தீர்கள் என்றால் தீங்கிற்கு உங்களை அர்ப்பணித்து தான் ஆண்டவர் உங்களை கொண்டு வருவார். நீங்கள் நன்றாக இருக்கும் போது கர்த்தரைத் தேடுவது, ஜெபம் பண்ணுவது நல்லது. கர்த்தர் மீனுக்கு கட்டளையிட்டார் அது யோனாவை கரையில் கக்கி விட்டது. சாத்தான் விழுங்கிய அனைத்தையும் தேவன் உங்கள் மடியில் கக்கப்பண்ணுவார். உங்களுக்குள்ளதை அவன் அபகரித்துக் வைத்திருக்கிறான். அவனிடத்திலிருந்து பறித்து தேவன் உங்களுக்குத் திரும்ப கொடுப்பார்.


உம்மை அறியாத ஜாதிகளின்மேலும், உமது நாமத்தைத் தொழுதுகொள்ளாத வம்சங்களின்மேலும், உம்முடைய உக்கிரத்தை ஊற்றிவிடும், அவர்கள் யாக்கோபைப் பட்சித்து, அவனை விழுங்கி, அவனை நிர்மூலமாக்கி, அவன் வாசஸ்தலத்தைப் பாழாக்கினார்களே. எரே 10:25. ஆபகூக் 1:13-ல் துன்மார்க்கன் தன்னைப் பார்க்கிலும் நீதிமானை விழுங்கும்போது நீர் மௌனமாயிருக் கிறதென்ன? துன்மார்க்கன் நீதிமானை விழுங்கப் பார்க்கிறான். துன்மார்க்கனுக்கு முடிவு கட்ட இயேசு சீக்கிரம் இந்த பூமிக்கு வரப்போகிறார். இயேசுவின் தலையில் முள்முடி வைக்கப்பட்டபோது சாத்தானின் தலை உடைக்கப்பட்டு போயிற்று. எப்படி உடைந்தது என்றால் எரேமியா 51:44-ல் நான் பாபிலோனில் இருக்கிற பேலைத் தண்டிப்பேன், அது விழுங்கினதை அதின் வாயிலிருந்து கக்கப்பண்ணுவேன், ஜாதிகள் இனி அதினிடத்திற்கு ஓடிவரமாட்டார்கள், பாபிலோனின் மதிலும் விழும். சாத்தான் விழுங்கினதை அவன் வாயிலிருந்து கக்கப்பண்ணுவேன் என்று தேவன் சொல்லுகிறார். உங்களுக்கு வரவேண்டிய நன்மையை யாரோ ஒருவர் வாங்கி விட்டார்கள். அந்த வேலையை வேறொரு வனுக்கு கொடுத்து விட்டார்கள். அந்தக் தொழிலை வேறொருவன் அபகரித்து விட்டான். அந்த இடத்தைப் வேறொருவன் வாங்கி விட்டான். இன்றைக்கு கர்த்தர் உங்களுக்குச் சொல்லுகிறார் நீங்கள் இழந்த அத்தனை ஆசீர்வாதங்களையும் தேவன் உங்களுக்குத் திரும்ப தருவார். இனி தரித்திரம், சாபம், பணப்பற்றாக்குறை உங்கள் வாழ்க்கையில் வருவதில்லை. 1 கொரி 15:54—ல் அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளும்போது, மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும். ஏசாயா 25:8-ல்

அவர் மரணத்தை ஜெயமாய் விழுங்குவார்; கர்த்தராகிய தேவன் எல்லா முகங்களிலுமிருந்து கண்ணீரைத் துடைத்து,

**தமது ஜனத்தின் நிந்தையை பூமியிலிராதபடிக்கு முற்றிலும் நீக்கிவிடுவார், கர்த்தரே இதைச் சொன்னார்.** இயேசுகிறிஸ்து மரணத்தை ஜெயமாக விழுங்கி விட்டார். கர்த்தராகிய தேவன் எல்லா முகங்களிலிருந்து அவர்களுடைய கண்ணீர்கள் யாவையும் துடைத்தார். ஒரு மனிதனுக்கு அழிவு, ஆபத்து, மரணம் எப்பொழுது வரும் என்று தெரியாது. ஆனால் நீங்கள் இயேசுவை அறிந்திருந்தீர்களானால் அந்த இயேசு உங்களுக்கு வரவேண்டிய தீமையை, சாத்தானை விழுங்கி விடுவார். அவர் வேடனுடைய கண்ணிக்கும் பாழாக்கும் கொள்ளை நோய்க்கும் உங்களை தப்புவிப்பார். அதற்குத்தான் அவர் உயிரோடு இருக்கிறார், வாழ்கிறார். இன்றைக்கு அந்த ஆண்டவர் உங்களுக்கு வரவேண்டிய நன்மையை, ஆசீர்வாதத்தை, சாத்தான் விழுங்கி இருக்கிறதை அவனை அழித்து ஒவ்வொன்றாக உங்களுக்குத் திரும்ப கிடைக்கச் செய்து அவனுக்கு முன்பாக உங்களை உயர்த்துவார்.

## மரணமானது ஜீவனாலே விழுங்கப்பட்டது

**இந்தக் கூடாரத்திலிருக்கிற நாம் பாரஞ்சுமந்து தவிக்கிறோம், இந்தப் போர்வையைக் களைந்துபோடவேண்டுமென்று விரும்பாமல், மரணமானது ஜீவனாலே விழுங்கப் படுவதற்காகப் போர்வை தரித்தவர்களாயிருக்கவேண்டுமென்று விரும்புகிறோம். 2 கொரி 5:4**



ஜீவனை மரணம் விழுங்கவில்லை, மரணத்தை ஜீவன் விழுங்கி விட்டது. நீங்கள் ஜெபிக்கும் போது உங்கள் ஆத்துமா ஜீவன் பெருகிறது. ஜீவன் வர வர நம்முடைய வாழ்க்கையில், சரீரத்தில் இருக்கிற எல்லா பலவீனங்களும் மாறுகிறது.

சாராள் கர்ப்பம் தரிக்க பெலன் இல்லாத போதும் எனக்கு கர்த்தர் சொன்ன வார்த்தை கண்டிப்பாக நிறைவேறும் என்று விசுவாசித்தப் படியே அவளுக்கு நடந்தது. ஏன்னென்றால் அந்த தேவன் இன்றைக்கும் ஜீவனோடு இருக்கிறார். அவர் தீச்சூளையின் நடுவில் மூன்று வாலிபர்கள் இருக்கும் போது ஒரு தீ கூட அவர்கள் மேல் படாமல் அவர்களை பாதுகாத்தார். அவர்களுக்கு ஏஸியாக அவர் மாறிவிட்டார். சிங்கக்கெபியில் தானியேலை விழுங்க காத்திருந்த சிங்கத்தின் வாயை தேவன் கட்டிப்போட்டார். ராஜாவுக்கு முன்பாக தானியேலை அவதூறாக சொன்னவர்களை சிங்கங்கள் விழுங்கிப் போட்டது.

ஜான்வெஸ்லி என்ற ஒரு தேவஊழியர் இருக்கிறார். அவர் அநேக மரித்தவர்களை உயிரோடே எழுப்பி இருக்கிறார். அவருடைய மனைவி திடீரென்று நோய்வாய் பட்டு இறந்த விட்டார்கள். அவர் வெளி தேசத்தில் ஊழியத்தில் இருந்தார். நான் வரும் வரைக்கும் என் மனைவியின் சரீரத்தை அடக்கம் பண்ண வேண்டாம் என்று சொல்லி விட்டார், தன் வீட்டிற்குள் சென்று தன் மனைவியை பார்த்துக் பேசினார். நான் வீட்டிற்குள் வந்திருக்கிறேன் வாங்க என்று கேட்காமல் இப்படி படுத்திருக்கிறாய் என்று சொல்லி விட்டு, இயேசுவின் நாமத்தினாலே தன் மனைவிக்காக ஜெபித்த போது அவர்கள் மீண்டும் உயிரோடு எழும்பி விட்டார்கள். ஒவ்வொரு வருடமும் உங்களை அற்புதமாய் நடத்துகிற தேவன் உங்களோடு இருக்கிறார். எந்த சாத்தான் உங்களுடைய ஆசீர்வாதங்களை விழுங்கி இருக்கிறானோ அவன் இன்றைக்கு உங்களை விட்டு ஓடிப்போகிறான். உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும். அடங்காத உங்கள் பிள்ளைகள் அடங்குவார்கள். வழிதப்பி போன கணவர் மனம் திரும்பி வருவார். மீனின் வயிற்றுக்குள் போன யோனாவை அற்புதமாய் வெளியே கொண்டு வந்த ஆண்டவர், மீனின் வாயிலிருந்து வெள்ளிப் பணத்தை வெளியே கொண்டு வந்தவர். இன்றைக்கு உங்களை ஆசீர்வதித்து, அற்புதமாய், அதிசயமாய் நடத்த போகிறார். என் ஆண்டவராகிய தேவன் தாமே நீங்கள் இழந்த அத்தனை நன்மைகளையும் திரும்ப கொடுத்து உங்களை உயர்த்துவாராக.


செம்பட்டியில்
Jesus Lives MINISTRIES
ஜூலை
12,13
ஆசீர்வாத
உபவாச ஜெபம்
வெள்ளி,
சனிக்கிழமை
காலை 9:30 AM முதல்
மதியம் 2:00 PM வரை
இடம்:
வானத்தின் வாசல் எழுப்புதல்,
ஜெப மையம், செம்பட்டி, திண்டுக்கல்.
தொடர்புக்கு : 94980 00449 , 94428 00449


மதுரையில்
Jesus Lives MINISTRIES
எழுப்புதல்
உபவாச ஜெபம்
ஜூலை
19
சனிக்கிழமை
நேரம் :
9:30 AM- 2:00 PM
இடம்:
இயேசு அழைக்கிறார் ஜெபகோபுரம், பைபாஸ் ரோடு,
பழங்காநத்தம், PRC Depot அருகில், மதுரை.
தொடர்புக்கு : 94428 00449,94980 00449


LIVE
நேரலை நிகழ்ச்சி
புதிய மாத ஆசீர்வாத வாக்குத்தத்த ஜெபம்
நம்பிக்கையின் இரவு
ஜூலை
31
வியாழக்கிழமை
இரவு 10:30 AM முதல்
12:30 PM வரை
நமது இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்
அனைத்து சமூக ஊடகங்கள் மற்றும் இணையதளத்திலும் ஒளிபரப்பாகிறது.
உங்கள் ஜெப விண்ணப்பங்களை அனுப்புங்கள்
உங்களுக்காக ஜெபம் ஏறெடுக்கப்படும்
அனுப்ப வேண்டிய
தொலைபேசி எண் 94428 00449

சாட்சி பகுதி

# சர்வவல்லவர் செய்த நன்மைகளில் சில...



**சகோதரி. சுதா - திண்டுக்கல்**

ஜீன் மாதத்தில் இயேசு வாழ்கிறார் ஊழியத்திலிருந்து முழுஇரவு ஜெபத்திற்கு வரும்படி தொலைபேசியில் என்னை அழைத்தார்கள். அன்று எனக்கு திருமணநாள் எனக்காகவும், என் கணவருக்காகவும் ஜெபிக்க கேட்டுக் கொண்டேன். என் கணவருக்கு இருதயப்பிரச்சனை இருந்தது. ஏற்கனவே நாங்கள் மருத்துவமனைக்கு சென்றபோது ஆன்சியோ பண்ண வேண்டியிருக்கும் என்று மருத்துவர்கள் சொல்லியிருந்தார்கள். ஆனால் எங்கள் திருமணநாள் அன்று சகோதரி அவர்கள் ஜெபித்த போது ஒரு தீங்கும் நேரிடாமல், பணம் விரையமாகாமல் தேவன் காப்பார் என்று சொல்லி ஜெபித்தார்கள். அதுபோலவே மறுவாரத்தில் மருத்துவமனைக்கு சென்று பரிசோதித்து பார்த்த போது மருத்துவார்கள் ஆச்சரியப்பட்டார்கள், ஆன்சியோ பண்ண வேண்டியதில்லை எல்லாம் நன்றாக உள்ளது என்று சொல்லி விட்டார்கள். அற்புதம் செய்த தேவனுக்கு கோடி ஸ்தோத்திரம்.

**சகோதரி. சித்ரா — மதுரை**

கடந்த மாதத்தில் என் கணவருக்கு சிறுநீர் பையில் பிரச்சனையாகி தன்னால் நீர் போய்க் கொண்டேயிருந்தது. எல்லா நேரமும் டைபர் போட்டுத்தான் இருக்க வேண்டும். இந்த நிலையில் நான் மதுரை எழுப்புதல் உபவாச ஜெபத்தில் கலந்து கொண்டேன். கூட்டம் முடிந்த பின்பு சகோதரரிடம் என் கணவர் சுகத்திற்காக ஜெபிக்கச் சொன்னேன், அவர்களும் பாரத்தோடு ஜெபித்தார்கள், நான் நம்பிக்கையோடு வீட்டிற்கு கிளம்பினேன், அப்பொழுது அங்கு கொடுக்கப்பட்ட மதிய உணவை வாங்கிக் கொண்டு வந்து என் கணவரிடம் விசுவாசத்தோடு சாப்பிடச் சொன்னேன். அந்த உணவை சாப்பிட்ட அன்றிலிருந்து தன்னால் நீர் போனது நின்று விட்டது. சுகம் கொடுத்த தேவனுக்கு கோடான கோடி நன்றி. தற்போது என் கணவர் நல்ல சுகத்தோடு இருக்கிறார். ஜெபித்த உங்களுக்கும் நன்றி.


**சகோதரி - கீதா — கன்னியாகுமாரி**

கடந்த வாரத்தில் என் மகன் நவீனுக்கு நல்ல நிரந்தரமான வேலை கிடைக்கவும், தேவனுக்கு பிரியமில்லாத வழிகளை விட்டு மனந்திரும்பவும், அவனுடைய வாழ்க்கையில் சமாதானம் உண்டாகவும் ஜெபிக்குமாறு தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஜெபிக்க கேட்டுக் கொண்டேன். தாங்கள் அவனுக்காக பாரத்தோடு ஜெபித்தீர்கள். தேவன் ஜெபத்திற்கு பதில் தந்தார், நல்ல வேலை கிடைக்கச் செய்தார். பாவ வழிகளை விட்டு விடவும் கிருபை செய்தார். அற்புதம் செய்த தேவனுக்கு கோடான கோடி ஸ்தோத்திரம்.

# கடந்த மாதம் நடந்து முடிந்த கூட்டங்களில் சில பகுதிகள்

# முழு இரவு ஜெபம்

தேவனுடைய பெரிதான கிருபையினால் நமது வானத்தின் வாசல் எழுப்புதல் ஜெப மையத்தில் வைத்து நடைபெற்ற முழு இரவு ஜெபத்தை தேவன் அளவில்லாமல் ஆசீர்வதித்தார். தேசத்திற்காக அழிந்து போய் கொண்டிருக்கும் ஆத்துமாக்களின் இரட்சிப்பிற்காக பாரத்தோடு ஜெபிக்கும் ஜெப வீரர்களையும், ஜாமக்காரர்களையும் தேவன் கூட்டி சேர்த்து ஜெபிக்க வைத்தார். ஜெபத்திற்கு வந்த ஒவ்வொருவரையும் தேவன் ஆரம்பம் முதல் முடிவு மட்டும் தேவ ஆவியானவரின் பிரசன்னத்தில் களிகூரச் செய்தார். ஆவியானவர் தமது வல்லமையினால் ஒவ்வொருவரையும் அளவில்லாமல் நிரப்பினார். பாவ சாப கட்டுகள் உடைந்து மக்கள் விடுதலையை அனுபவித்தார்கள். ஜாமக்காரன் என்ற தலைப்பில் நம் சகோதரர் அவர்கள் கொடுத்த தேவ செய்தியின் மூலம் இன்னும் அதிகமாய் திறப்பில் நின்று ஜெபிக்க மக்களை உற்சாகப்படுத்தினது. அநேகர் ஜெப வீரர்களாய் எழும்பி இருக்கிறார்கள் தேவ நாமம் மகிமைப்பட்டது. அவருக்கு கோடான கோடி ஸ்தோத்திரம்











# செம்பட்டி, மதுரை கூட்டங்கள்



நமது வானத்தின் வசலில் ஜூன் 13.14 ஆகிய தேதிகளில் நடைபெற்ற உபவாச ஜெபங்களை தேவன் அளவில்லாமல் ஆசீர்வதித்தார். ஒவ்வொரு மாதமும் புதிய புதிய ஜனங்களை அழைத்து வந்து அவர்கள் வாழ்வில் மனமாற்றத்தை கொடுத்து. அவர்கள் மன்றாட்டுக்கு பதில் தந்து. அவர்களை சாட்சியாக வாழ வைக்கிற தேவனுக்கு கோடான கோடி நன்றி. மேலும் மதுரையில் ஜூன் 21-ஆம் தேதி நடைபெற்ற எழுப்புதல் உபவாச ஜெபத்தையும் தேவாதி தேவன் ஆசீர்வதித்தார். இங்கு கிரியை செய்கிற பலவானின் கிரியைகள் முறியடிக்கப்பட்டு பட்டணத்திற்காக ஏறெடுக்கப்படுகிற விண்ணப்பங்களுக்கு தேவன் பதில் தந்து புது புது ஆத்துமாக்களை தேவன் அழைத்து வருகிறார்.







இக்கூட்டங்களில் நம் சகோதரி அவர்கள் பாடல்களை பாடி. ஆராதனையை நடத்தும்போது. நம் சகோதரர் அவர்கள் தேவ செய்தி கொடுக்கும் போதும் தேவன் ஜனங்களை தொட்டு அவர்களை விடுதலையாக்குகிறார். அவர்களை சாட்சியாக மாற்றுகிறார். நீங்களும் இக்கூட்டங்களில் கலந்து கொண்டு தேவ ஆசீர்வாதத்தைப் பெற உங்களை அன்போடு அழைக்கிறோம்.





## இயேசு வாழ்கிறார் ஊழியத்தோடு இணைந்து சுவிசேஷ ஒளியை பரவ செய்யுங்கள்

தேவன், தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் தமது ஊழியத்தில் பங்கு பெறவேண்டுமென்று விரும்புகிறார். அவரது நோக்கத்தை நிறைவேற்ற அவர் தமது பிள்ளைகளை பயன்படுத்துகிறார். நாம் வெறும் பார்வையாளராயிருப்பதை அவர் விரும்பாமல், அவரது ஊழியத்தின் பங்காளராக மாறுவதையே அவர் விரும்புகிறார்! நாம் கரையில் நிற்பதை விரும்பாமல் களத்தில் இறங்குவதையே அவர் விரும்புகிறார். அறிவிக்கப்படாத மக்களைச் சந்தித்து, சுவிசேஷத்தை கூறி, உலகை சுவிசேஷமயமாக்குகிற அந்த மகிமையான ஊழியத்தில் தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஈடுபட வேண்டும் என அவர் விரும்புகிறார்!

விளையச் செய்கிறவர் தேவனாக இருந்தாலும், விதைக்கிற வேலையையும், நீர்ப்பாய்ச்சுகிற வேலையையும் அவர் நமது கரங்களில் ஒப்படைத்திருக்கிறார் (1கொரிந்தியர்3:7). இக்கடைசி காலத்தில், தமது சித்தத்தை நிறைவேற்றுகிற பணியில் ஈடுபட வேண்டுமென கர்த்தர் விரும்புகிறார்.

வாருங்கள்! இக்கடைசி கால எழுப்புதல் சுவிசேஷ பணியில் இணைந்து அவரது நோக்கத்தை நிறைவேற்றுகிற ஊழியத்தின் பங்காளர்களாக மாறுவோமாக!

## 1) BANK TRANSFER

| | | |
|---|---|---|
| A/C NAME | : | JESUS LIVES TRUST |
| BRANCH | : | KOCHADAI MADURAI |
| BANK NAME | : | UNION BANK OF INDIA |
| A/C.NO | : | 493902010001022 |
| IFSC CODE | : | UBIN0549398 |

| | | |
|---|---|---|
| A/C NAME | : | L.VINCENT RAJ |
| BRANCH | : | MADURAI |
| BANK NAME | : | AXIS BANK |
| A/C.NO | : | 109010100247030 |
| IFSC CODE | : | UTIB0001765 |

## 2) இணையதளம்(WEBSITE)

WWW.JESUSLIVES.IN

## 3) காசோலை(CHEQUE)

JESUS LIVES TRUST OR L.VINCENT RAJ

## 4) GOOGLE PAY : GPAY TO , 944 300 9333 ,7598359316

**5) மணியார்டர்(E.M.O)** இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் 54 ஏ.ஐ.பி.இ.ஏ நகர், ஏ – காலனி பரவை ,மதுரை – 625 402

நமது இயேசு வாழ்கிறார் ஊழியத்திற்கென்று வங்கிக் கணக்கு மூலமாகவோ, இணையதளம் மூலமாகவோ, அல்லது **GOOGLE PAY** மூலமாகவோ அனுப்பலாம். காணிக்கை அனுப்பியபின் அதைக் குறித்த விபரத்தை **944 2800 449** என்கிற இந்த எண்ணில் தொடர்பு கொண்டோ, அல்லது இதே எண்ணிற்கு **WHATSAPP** மூலமாகவோ, **accounts@jesuslives.in** மூலமாகவோ எங்களுக்கு தெரியப்படுத்தவும்.


சென்னையில்
Jesus Lives MINISTRIES
நற்செய்தி விடுதலை பெருவிழா
ஜூலை
5-6
சனிக்கிழமை,
ஞாயிற்றுக்கிழமை
தினமும் மாலை
6:00 PM
மணி முதல்
EVG. VINCENTRAJ
EVG. KALAVINCENT
இடம்:
கிரிக்கெட் விளையாட்டு மைதானம், (கேண்டேர் கம்பெனிக்கு போகும் வழி), ராதா ரெசிடென்சி அருகில்,
குன்றத்தூர், ஸ்ரீபெரும்புதூர் நெடுஞ்சாலை.
தொடர்புக்கு : 94980 00449 , 91766 21958


Jesus Lives MINISTRIES
இராமநாதபுரம்
ஜூலை
26
ஆசீர்வாத உபவாச ஜெபம்
சனிக்கிழமை
10:00 AM- 2:00 PM
இடம்:
CSI கிறிஸ்துநாதர் ஆலயம்,
இராமநாதபுரம்
தொடர்புக்கு : 94428 00449,94980 00449